ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2143 - 2019 සැප්තැම්බර් මස 27 වැනි සිකුරාදා - 2019.09.27

*2143 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *2494* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *2507* |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2019, ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*2491*-B *81561-5,403 (2019/09)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலூவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லூத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலூவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழராத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க சேவை ஆணைக்குழு

### இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவையின் I ஆந் தர பதவியில் நியமித்தல்

இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவையின் I ஆந் தரத்துக்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு நியமிப்பதற்காக இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவையின் I ஆந் தரத்துடைய அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| *திணைக்களம்* | *பதவி* | *வெற்றிட எண்ணிக்கை* |
|---|---|---|
| கட்டிடங்கள் திணைக்களம் | சிரேஷ்ட கட்டடக் கலைஞர் | 01 பதவி |
| தேசிய பௌதீக திட்டமிடற் திணைக்களம் | பணிப்பாளர் (கட்டடக் கலைஞர்) | 01 பதவி |

02. பூர்த்தி செய்திருக்க வேண்டிய தகைமைகள் :

(i) கட்டடக் கலைஞர் சேவையின் I ஆந் தரத்துடைய அலுவலராக இருத்தல்.

03. பதவியில் நியமனம் செய்யும் முறை.-

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை குழுவொன்றினால், அவ் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி வழங்கும் நடைமுறைக்கு ஏற்ப புள்ளிகளை வழங்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு, அவர்களின் சேவை அனுபவம் மற்றும் திறமைகளுக்காக பெற்றுக்கொள்ளும் திரட்டப்பட்ட புள்ளிகளுக்கு முன்னுரிமை ஒழுங்கு அடிப்படையில் மற்றும் விண்ணப்பதாரிகளின் விருப்பத்தையும் கவனத்திற் கொண்டு மேற்கூறப்பட்ட வெற்றிட எண்ணிக்கைக்கு ஒத்திசைவாக குறித்த பதவியில் நியமிக்கப்படுவார்கள் என்பதோடு அமுல் நடாத்தப்படும் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

04. புள்ளி வழங்கும் நடைமுறை :

| இலங்கை கட்டடக் கலைஞர் சேவை I ஆந் தரத்துடைய பதவிக்காக மூப்புநிலை மற்றும் திறமையின் அடிப்படையில் பதவியில் நியமிக்கப்படுதல்-அங்கீகரிக்கப்பட்ட புள்ளி வழங்கும் நடைமுறை | *அதிகபட்ச புள்ளிகள்* | *மொத்த புள்ளிகள்* |
|---|---|---|
| 01. சேவை அனுபவம்<br>இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவையின் I ஆந் தரத்தில்,<br>a. ஒரு வருட காலத்துக்காக - 05 புள்ளிகள்<br>b. 06 மாத காலத்துக்காக - 03 புள்ளிகள்<br>c. 03 மாத காலத்துக்காக - 02 புள்ளிகள்<br>(03 மாதங்களை விடக் குறைந்த சேவைக் காலம் உடையவர்களுக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.) | 65 | 65 |
| 02. திறமைகள் - கட்டடக் கலைஞர் துறைக்கு காட்டும் பங்களிப்பு<br>02.1 மேலதிக கல்வித் தகைமைகள்<br>02.1.1 பட்டப்பின் பட்டம்<br>- கலாநிதிப் பட்டம் - 15 புள்ளிகள்<br>- தத்துவ முதுமானிப் பட்டம் (MPhil) - 10 புள்ளிகள்<br>- விஞ்ஞான முதுமானிப் பட்டம் (MSc) - 05 புள்ளிகள்<br>(அதிகூடிய தகைமைக்கு மாத்திரம் புள்ளி வழங்கப்படும்). | 15 | 30 |

| இலங்கை கட்டடக் கலைஞர் சேவை I ஆந் தரத்துடைய பதவிக்காக மூப்புநிலை மற்றும் திறமையின் அடிப்படையில் பதவியில் நியமிக்கப்படுதல்-அங்கீகரிக்கப்பட்ட புள்ளி வழங்கும் நடைமுறை | அதிகபட்ச புள்ளிகள் | மொத்த புள்ளிகள் |
|---|---|---|
| 02.2 கட்டடக் கலைஞராக கட்டடக் கலைக் கல்வி மற்றும் தொழிற்துறையைக் கட்டியெழுப்பும் வகையில் காட்டப்பட்டுள்ள பங்களிப்பு<br>02.2.1 துறையுடன் தொடர்புடையதாக பத்திரிகைகளில் அல்லது மாநாடுகளில் வெளியிடப்பட்ட ஆவணங்கள் (Published papers in journals or conferences)/புத்தகங்கள்<br>- ஒரு வெளியீட்டுக்கு 03 புள்ளிகள் என்ற வீதம் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளில் வெளிவந்த கட்டுரைகள்<br>- ஒரு வெளியீட்டுக்கு 03 புள்ளிகள் என்ற வீதத்தில்<br>02.2.2 கட்டடக் கலைக்கு உரித்தான உள்நாடு/வெளிநாட்டில் அங்கீகரிக்கப் பட்ட நிறுவனமொன்றில் வகித்த பதவிக்காக<br>- வகித்த ஒரு பதவிக்காக 02 புள்ளிகள் என்ற வீதம் (எழுத்து மூல உறுதிப்படுத்தலை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.)<br>02.2.3 பாராட்டுக்களுக்காக<br>- நிறுவனத் தலைவரால் பொது 230b என்ற மாதிரிப் படிவத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஒரு பாராட்டுக் கடிதத்துக்கு 01 புள்ளி என்ற வீதம் | 06<br>06<br>03 | |
| 03. நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை<br>a. தலைமைத்துவம் - 02 புள்ளிகள்<br>b. தொடர்பாடல் திறன் - 02 புள்ளிகள்<br>c. ஆளுமை - 01 புள்ளி | | 05 |
| மொத்தப் புள்ளிகள் | | 100 |

**க. வே.-**

(i) திறமைக்கு ஏற்ப பட்டப்பின் பட்டத்திற்காக புள்ளிகள் வழங்கும் போது இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவையின் I ஆந் தரத்துக்கு பதவியுயர்த்துவதற்காக கருத்திற் கொள்ளப்பட்ட பட்டப்பின் பட்டத்திற்காக மீள புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

(ii) 2.2.1 மற்றும் 2.2.2 இன் கீழ் புள்ளிகள் வழங்குவதற்காக சமர்ப்பிக்கப்படும் சகல வெளியீடுகளையும் எழுத்து மூலம் உறுதிப்படுத்தி சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

5. பின்வரும் மாதிரிப்படிவத்துக்கு ஏற்ப பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவரின் பரிந்துரையுடன், பதிவுத்தபாலில் 2019.10.28 ஆந் திகதிக்கு அல்லது அத்திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறும் வகையில் "கொழும்பு 07, சுதந்திர சதுக்கம், பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சின் செயலாளர்" இற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் I ஆந் தரத்துடைய பதவியில் நியமனம் செய்தல்" என்பதனை தெளிவாக எழுதி அனுப்புதல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் தொலைந்து போன அல்லது தாமதமானவை தொடர்பில் முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

6. விண்ணப்பப்படிவத்தை www.pubad.gov.lk என்ற இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும்
கால்நடை அபிவிருத்தி அமைச்சு.

2019, செத்தெம்பர்,10

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கட்டடக் கலைஞர் சேவையின் I ஆந் தர அலுவலர்களின் சேவை அனுபவம் மற்றும் திறமை அடிப்படையில் I ஆந் தர வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பம்**

I ஆம் பகுதி - அலுவலரினால் பூரணப்படுத்துதல் வேண்டும்.

1. அலுவலரின் முழுப்பெயர் (சிங்களத்தில்) :..............................................................................................................
.............................................................................................................................................................

2. அலுவலரின் இறுதியாக வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை பின்னரும் இடப்பட்ட பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ..............................................................................................
.............................................................................................................................................................

3. அலுவலரின் முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :.....................................................................
.............................................................................................................................................................

4. பால் நிலை :- பெண் ☐ ஆண் ☐

5. பிறந்த திகதி :- ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

6. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

7. தற்போது கடமையாற்றும் சேவை நிலையம் : .............................................................................................
.............................................................................................................................................................

8. (i) நிரந்தர முகவரி ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் (கடிதம் கிடைக்கப்பெறுவது இம் முகவரிக்காகும்) :......................
.............................................................................................................................................

(ii) தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

9. (i) இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் I ஆந் தரத்துக்கு நியமிக்கப்பட்ட திகதி :............................

(ii) இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் I ஆந் தரத்துக்கு நியமனம் பெற்ற திகதி முதல் விண்ணப்பம் கோரும் திகதிக்கு அவரின் சேவைக்காலம் :-

வருடம் ☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

10. கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் :-

| தொடரிலக்கம் | கல்வித் தகைமைகள் | தகைமைகளைப் பூரணப்படுத்திய வருடம் | நிறுவனம் |
|---|---|---|---|
| 1. | கலாநிதிப் பட்டம் | | |
| 2. | தத்துவ முதுமானிப் பட்டம் (MPhil) | | |
| 3. | விஞ்ஞான முதுமானிப் பட்டம் (MSc) | | |
| 4. | ஏனைய | | |

11. சேவை அனுபவம்

(i) புள்ளி வழங்கும் நடைமுறை 2.2.1 இன் கீழ் துறையுடன் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட வெளியீடுகள் :...................
.............................................................................................................................................................
.............................................................................................................................................................

(ii) புள்ளி வழங்கும் நடைமுறை 2.2.1 இன் கீழ் கட்டடக் கலைக்கு உரிய உள்நாடு/ வெளிநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் வகித்த பதவிகள் :............................................................................................................
.........................................................................................................................................

12. (i) இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் I ஆந் தரத்துக்கு நியமனம் பெற்ற திகதி முதல் சம்பளமற்ற விடுமுறைகள் அல்லது அரைச் சம்பள விடுமுறைகள் எடுத்திருக்கின்றாரா?

| தொடர் இல. | காரணம் | காலம் | |
|---|---|---|---|
| | | திகதி முதல் | திகதி வரை |
| | | | |
| | | | |

(ii) விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு உடன்முன்னரான 05 வருடங்களுக்கு சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்துள்ளாரா?

ஆம் ☐ இல்லை ☐

13. (i) கடந்த 05 ஆண்டுகளினுள் ஒழுக்காற்று தண்டனைக்கு உட்பட்டுள்ளாரா? :...................................................................
(ii) முடிவுறாத ஒழுக்காற்று விடயங்கள் காணப்படுகின்றதா? :............................................................................

14. கோரப்படும் பதவி (முன்னுரிமை ஒழுங்கிற்கு ஏற்ப இலக்கம் 1 மற்றும் 2 ஆக குறிப்பிடவும்)

(i) சிரேஷ்ட கட்டடக் கலைஞர் ☐
(ii) பணிப்பாளர் (கட்டடக் கலைஞர்) ☐

15. மேற்குறிப்பிட்ட தகவல்கள் சரியானதாகவும் நம்பகத்தன்மை கொண்டதாகவும் நான் கூறியுள்ளேன் என சான்றுப்படுத்துகின்றேன்.

.......................... ........................................
திகதி அலுவலரின் கையொப்பம்

II ஆம் பகுதி - திணைக்களத் தலைவரினால் பரிந்துரை மற்றும் சான்றுப்படுத்தல்

ஏற்புடையதற்ற சொற்களை நீக்கிவிடவும்.

(i) இவ் விண்ணப்பதாரிகள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு அல்லது நடவடிக்கை எடுப்பதற்கு கருதப்படவில்லையாயின், (எடுத்திருப்பின் தவறிழைத்த திகதி, தண்டனையுடன் விபரிக்கவும்.)

(ii) இவ் விண்ணப்பதாரி I ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தப்பட்டதன் பின்னர் சம்பளமற்ற அல்லது அரைச் சம்பளம் பெற்றுள்ளார்/ இல்லை. (ஆமெனில், காலப் பகுதியை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடுக.)

| காலம் | | அரைச் சம்பளம்/சம்பளமற்ற விடுமுறைகள் | காரணம் |
|---|---|---|---|
| தொடக்கம் | வரை | | |
| | | | |

(iii) பதவியுயர்த்தப்படும் திகதிக்கு உடன்முன்னரான ஐந்து (05) வருடங்களினுள் சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்து திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ளார்/ இல்லை.

(iv) அதற்கிணங்க, அவர் இந்நேர்முகப் பரீட்சையில் தோற்றுவதற்கு அவசியப்படும் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார்/ இல்லை என்பதால் விண்ணப்பத்தை பரிந்துரைக்கின்றேன்/ இல்லை.

------,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :-----.

09-878

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - கேகாலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் /மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர், 40 வயதிற்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும். விதவைகள்/ தபுதாரர் அல்லது விவாகரத்தானவரா யிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2019, ஐப்பசி மாதம் 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்குக் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, செத்தெம்பர் 09.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கேகாலை | வரகாபொல | கீரவெலிபற்று கிழக்குப் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் பெலிகல் கோறளைப் பிரிவின் விவாக (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கேகாலை. |

09-993

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி - காலி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர் 40 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் அதிகபட்ச வயது 65 ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பதாரர் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாதவராக இருத்தல் வேண்டும். தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகப் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2019, ஐப்பசி மாதம் 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, செத்தெம்பர் 04.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| காலி | அக்மீமன | காலி மாவட்ட பிரிவின் ஹாலிவல பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், காலி. |

09-994

## கல்வி அமைச்சு

### *நாட்டிலுள்ள மாகாணப் பாடசாலைகளின் விசேட கல்விப்பிரிவுகளில் நிலவும் சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களுக்கு கல்விமாணிப் பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவை 2 ஆம் வகுப்பில் II ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2019*

*நாட்டிலுள்ள மாகாணப் பாடசாலைகளின் விசேட கல்விப்பிரிவில் நிலவும் சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்கள் தொடர்பாக கல்விமாணிப் பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவை 2 ஆம் வகுப்பில் II ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பாக ஆண்,பெண் இருபாலார்களிடமும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2019.10.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக "உதவிச் செயலாளர், ஆசிரியர் தாபனக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பெலவத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். மேலும், விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு, சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிட வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் "நாட்டிலுள்ள மாகாணப் பாடசாலைகளின் விசேட கல்விப்பிரிவில் நிலவும் சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்கள் தொடர்பாக கல்விமாணிப் பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவை 2 ஆம் வகுப்பில் II ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல்-2019" என கட்டாயமாக குறிப்பிட வேண்டும்.*

***குறிப்பு 1.***- *விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பிலான கடிதம் தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதித்து கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதித் தினம் வரை விண்ணப்பப்படிவத்தைத் தாமதிப்பதன் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை விண்ணப்பதாரிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்படமாட்டாது.*

*02.* ***ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான முறைமைகள்.***-

*2.1 விண்ணப்பதாரர்கள் இந்த அறிவித்தலின் 5.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடன் 5.3 இல் குறிப்பிடப் பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா? என்பதைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக பொது நேர்முகப் பரீட்சை ஒன்றுக்குத் தோற்ற வேண்டும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சையின் போது நிராகரிக்கப்படுவர்.*

*2.2 நேர்முகப்பரீட்சையில் தகைமை பெறுவோர், தொழிலின் முக்கியத்துவம் வாய்ந்த கற்றல், கற்பித்தல் தொடர்பான திறமைகளை அளவீடு செய்வதற்காக இவ் வர்த்தமானி அறிவித்தலின் 9.2 வாசகத்திற்கமைய பிரயோகப் பரீட்சைக்குட்படுத்தப்படுவர். விண்ணப்பதாரியினால் பிரயோக பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் மொத்த புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட முறைமைக்கமைய காணப்படும் வெற்றிட எண்ணிக்கைக்கு இணங்க ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.*

*2.3 பிரயோகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகளுக்கு உரிய வெற்றிடப் பட்டியல் காட்சிப்படுத்தப்படும். அதன் பிரகாரம் விண்ணப்பதாரிகளினால் அச்சந்தர்ப்பத்தில் வெற்றிடம் காணப்படும் பாடசாலைகளுக்கு தங்களது நியமனம் பெறுவதற்கான விருப்பத்தினை தொடரொழுங்கில் குறிப்பிடப்பட வேண்டும்.*

***குறிப்பு 2.***- *ஒரே பாடசாலைக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளில் பலர் சமமான புள்ளிகளைப் பெற்றிருக்கும் சந்தர்ப்பங்களில் கல்வி அமைச்சின் செயலாளரினால் அனுமதிக்கப்படும் குறிப்பிட்ட புள்ளிகளை வழங்கும் நடைமுறைக்கமைய பொருத்தமான விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவர்.*

*2.4 இவ்வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்வது பாடசாலை மட்டத்திலானமுறைமையை அடிப்படையாகக் கொண்டதனால் 05 வருடங்கள் பூர்த்தியாகும் வரை எக்காரணம் கொண்டும் இடமாற்றம் வழங்கப்படமாட்டாது.*

*2.5 நிலவும் வெற்றிடங்கள்*

| *மாகாணம்* | *சிங்கள மொழிமூலம்* | *தமிழ் மொழிமூலம்* |
|---|---|---|
| மேல் | ✓ | ✓ |
| மத்திய | ✓ | ✓ |

நிலவும் வெற்றிடங்கள் (தொடர்ச்சி)

| மாகாணம் | சிங்கள மொழிமூலம் | தமிழ் மொழிமூலம் |
|---|---|---|
| தென் | ✓ | ✓ |
| வடக்கு | - | ✓ |
| கிழக்கு | ✓ | ✓ |
| வடமேல் | ✓ | ✓ |
| வடமத்திய | ✓ | ✓ |
| சப்ரகமுவ | ✓ | ✓ |
| ஊவா | ✓ | ✓ |

03. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்.-**

i. இந்தப் பதவி நிரந்தரமானது. பதவிக்குரிய ஓய்வூதிய சம்பள முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கை அடிப்படையிலான தீர்மானங்களுக்கு உட்பட வேண்டும்.

ii. இப்பதவிக்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் மூன்று (03) ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்படுவதுடன், அந்த மூன்று (03) ஆண்டுகளுக்குள் முதலாவது வினைத்திறன் தடைதாண்டலில் சித்தியடைய வேண்டும்.

iii. பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 01/2014 மற்றும் அதனுடன் இணைந்த சுற்றறிக்கைகளுக்கு அமைவாக அரச கருமமொழி தொடர்பில் தேர்ச்சியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

iv. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்குவிதிமுறைகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரச நிதி ஒழுங்குமுறைகளுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்பட்டிருக்கும்.

v. 2014.10.23 ஆம் திகதிய 1885/38 ஆம் இலக்கத்திற்குரிய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக்குறிப்பு மற்றும் 2019.04.22 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2120/2 ஆம் இலக்கத்திற்குரிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட திருத்திய இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் ஒழுங்கு விதிமுறைகளுக்கும், மற்றும் அச்சேவைப் பிரமாணக்குறிப்பில் இதற்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் அரசாங்க சேவை நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளுக்கும் இந்நியமனம் கட்டுப்படுகின்றது.

vi. மேலும், இதன் கீழ் நியமனம் பெறும் ஒருவர் பதவியுயர்வு பெற்றால் ஒழிய (அதாவது அதிபர் சேவை, கல்வி நிர்வாக சேவை அல்லது ஆசிரிய கல்வியியலாளர் சேவை) விசேட கல்வி அல்லது அதற்கு உட்பட்ட துறைகளில் சேவையில் ஈடுபடுதல் வேண்டும்.

04. **சம்பள அளவு.-** இப்பதவிக்கு பொதுநிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 03/2016 கொண்ட சம்பள சுற்றறிக்கைக்கு அமைவாக G-R-02-2016 ரூபா 33,300.00 - 495 x 5-825 x 7-1,335x20-ரூ. 71,650.00 (மாதாந்தம்) சம்பள அளவு உரித்தாகும். அவர்கள் இச்சம்பள அளவில் 3 ஆவது படிநிலையானரூபா 34,290.00 இல் அமர்த்தப்படுவார்கள். சம்பளக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவது இச்சுற்றறிக்கை II இன் உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிமுறைகளுக்கு அமையவாகும். இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் உங்களுக்கு உரித்தாகின்றது.

05. **கல்வித் தகைமைகள்.-**

5.1 இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் ஒழுங்கு விதிமுறைகளுக்கு அமையவும் மற்றும் இலக்கம் அமப/19/0117/127/003 மற்றும் 2019.01.29 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைவாக 2019.10.31 ஆந் திகதிக்கு பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

5.2 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட கல்விமாணி (விசேட கல்வித் தேவைகள்) பட்டமொன்று

மற்றும்

5.3 இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக்குறிப்பின் விதிமுறைகளுக்கு அமைவாக கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் சிங்கள மொழி அல்லது தமிழ்மொழியை ஒரு பாடமாக சித்தியடைந்திருக்க வேண்டும்.

**குறிப்பு** 3.- பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் உள்நாட்டு க.பொ.த. (சா. தர) பரீட்சை மற்றும் அதற்கிணைவாக ஏற்றுக்கொள்ளப்படும் வேறு பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கும் விண்ணப்பிக்கலாம்.

06. **வயது எல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

( "அதற்கமைவாக 2001.10.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1974.10.31 ஆந் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிறந்த தினத்தைக் கொண்டவர்கள் மாத்திரம் இதற்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியுடைவர் ஆவார்.)

07. **ஏனைய தேவைகள்**.-

(i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர்கள் சிறந்த நடத்தை கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

(iii) இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பப்படிவங்களை கோரும் இறுதித் திகதியன்று பதவிக்குச் சேர்த்துக்கொள்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(iv) சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை மேற்கொள்வதற்கும் போதியளவு உடல், உளத் தகைமைகளை கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

08. **விண்ணப்பிக்கும் முறை**.-

8.1 விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் A4 அளவு கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தித் தயாரித்து விண்ணப்பதாரியினால் பூரணப்படுத்தப்பட வேண்டும். 1.0 தொடக்கம் 4.6 வரையிலான தலைப்புக்கள் முதல் பக்கத்திலும் 5.0 தொடக்கம் எஞ்சியவைகளை மேலதிக பக்கத்திலும் உள்ளடக்கக்கூடியவாறு விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட வேண்டும் என்பதை விசேடமாகக் கவனத்திற் கொள்ளவும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்களும் சரியாக பூர்த்தி செய்யப்படாத தகவல்களைக் கொண்ட விண்ணப்பப்படிவங்களும் முன் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதியொன்றை தங்கள் வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாகும்) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் வர்த்தமானி அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பத்திற்கமைவானதா என விண்ணப்பதாரரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறில்லையெனில் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படுவதற்கு இடமுண்டு.

8.2 ஒரு விண்ணப்பதாரருக்கு ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும்.

8.3 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் ஒப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஏதேனும் ஒரு நிறுவனத்தினால் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தமது ஒப்பத்தை நிறுவனப் பொறுப்பாளர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்படும் உத்தியோகத்தர் ஊடாகவும், அவ்வாறின்றேல் விண்ணப்பதாரி தமது ஒப்பத்தை அரசாங்கப் பாடசாலை அதிபர், தமது பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நொத்தாரிசு, முப்படை அதிகாரத்தரத்தில் உள்ள உத்தியோகத்தர், அல்லது ரூபா 240,360.00 மேற்பட்ட அடிப்படை வருடாந்தச் சம்பளத்தைப் பெறும் அரசாங்கத்தின் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது தலைமைத் தேரர் அல்லது ஏனைய சமயங்களின் சமயத் தலைவர்கள் அல்லது வணக்கஸ்த்தலம் ஒன்றிற்குப் பொறுப்பான சமயப் பொறுப்பாளர்களில் குறிப்பிடத்தக்க தரத்தினைக் கொண்ட ஒருவர் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

8.4 வெற்றிடங்கள் தொடர்பாக கோரப்படும் மொழிமூலம் ஒருபோதும் மாற்றப்படமாட்டாது என்பதுடன், அது குறித்து சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

8.5 மாதிரிப் படிவத்திற்கு ஒவ்வாத மற்றும் பூரணமற்ற தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

9.0 **நேர்முகப் பரீட்சை**:-

9.1. **பொது நேர்முகப் பரீட்சை** - பொது நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

**குறிப்பு 4**.- மேற்கொள்ள எதிர்பார்க்கும் நோக்கம்.-

சேவைப் பிரமாணம் மற்றும் அதற்கு இணைவாக பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் அல்லது பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என பரிசீலனை செய்தல் மற்றும் உடல் தகுதியினைப் பரிசோதனை செய்தல்.

9.2 **பிரயோகப் பரீட்சை**.- பிரயோகப் பரீட்சையாக விண்ணப்பதாரியினால் இனங்காணப்பட்ட தலைப்பின் கீழ் சமர்ப்பிப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கு கீழ் குறிப்பிட்டவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| தொ. இல. | பிரயோகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்படும் ஒப்பளவுகள் | உயர்ந்தபட்ச புள்ளிகளின் அளவு | சித்தியடையத் தேவையான புள்ளிகளின் அளவு |
|---|---|---|---|
| 01 | நோக்கம் மற்றும் பிரவேசம் | 05 | 02 |
| 02 | ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு | 05 | 02 |
| 03 | தொடர்பாடலின் தெளிவுகள் | 05 | 02 |
| 04 | நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 05 | சமர்ப்பிக்கும் நுட்பமுறைகள் | 05 | 02 |
| | மொத்த புள்ளிகளின் அளவு | 25 | 10 |

**குறிப்பு 05**.- மேற்கொள்ள எதிர்பார்க்கும் நோக்கம்.-

ஆசிரியர் சேவையில் முக்கியமாகக் கருதப்படும் கற்றல் கற்பித்தல் செயன்முறை தொடர்பாக விண்ணப்பதாரியின் திறனை மதிப்பீடு செய்தல்.

9.2.1 **பிரயோகப் பரீட்சை முறை** :

(i) பிரயோகப் பரீட்சைக்கான நேரமாக 05 வினாடிகளுக்கு குறைவில்லாத நேரம் வழங்கப்படும்.

(ii) பிரயோகப் பரீட்சைக்காக பெறவேண்டிய கூடுதலான புள்ளிகள் இருபத்தைந்தாகும் (25).

(iii) பிரயோகப் பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு நியதிகள் தொடர்பாகவும் குறைந்தபட்சம் 02 புள்ளிகள் பெற வேண்டும்.

9.2.2 **நியதிகளின் இலக்குகள்** :

(i) நோக்கம் மற்றும் பிரவேசம் :
சிறப்பான முறையில் பாடத்தின் இலக்குகளை தெளிவுபடுத்தல் மற்றும் பாடத்திற்கு பிரவேசிக்கும் திறமையினை மதிப்பீடு செய்தல்.

(ii) ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு :
ஒரு ஆசிரியராக சிறந்த ஆளுமையைக் கொண்டிருத்தல் மற்றும் கற்பிக்கும் போது சிறப்பாக குரல்கட்டுப்படுத்தலுக்கான திறமையினை மதிப்பீடு செய்தல்.

(iii) தொடர்பாடலின் தெளிவுகள் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் போது உரிய விடயங்களில் பயனுள்ள விதத்திலான தொடர்பாடலை ஏற்படுத்தும் திறமையினை மதிப்பீடு செய்தல்.

(iv) நேர முகாமைத்துவம் வழங்கப்படும் கால எல்லைக்குள் இலக்குகளை அடையும் திறமையினை மதிப்பீடு செய்தல்

(v) சமர்ப்பிக்கும் நுட்பமுறைகள் இலக்குகளை அடைவதற்காக சமர்ப்பிக்கப்படும் நுட்பமுறைகளை சிறப்பாக கையாளும் திறமையினை மதிப்பீடு செய்தல்.

10. **விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்வதற்கான ஆலோசனை**.- விண்ணப்பப்படிவங்களை நிரப்பும்போது கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையை மாத்திரம் பயன்படுத்தவும்.

**அட்டவணை 01**

| மொழி மூலம் | குறியீட்டு இலக்கம் |
|---|---|
| சிங்கள மொழி மூலம் | 2 |
| தமிழ் மொழி மூலம் | 3 |

11. தற்போது அரசாங்க சேவையில் உள்ள அலுவலர்கள் விண்ணப்பப்படிவத்தில் தலைப்பு இலக்கம் 8.0 இன் கீழ் தமது திணைக்கள பொறுப்பாளர் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும்.

12. நேர்முகப்பரீட்சைக்காக உரிய தினத்தில் பங்கேற்காத விண்ணப்பதாரர்கள் தொடர்பில் எக்காரணம் கொண்டும் மீளக் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

13. அத்துடன் நேர்முகப்பரீட்சைத் தினமன்று சகல சான்றிதழ்களையும் சமர்ப்பிக்க வேண்டியதுடன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு சான்றிதழும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

14. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் இருப்பின் அது தொடர்பாக தீர்மானம் எடுக்கும் உரிமையும் வெற்றிடங்களில் ஏதேனும் ஒரு பகுதி அல்லது முழுமையாக நிரப்ப அல்லது நிரப்பாது இருப்பது தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை கல்விச் செயலாளருக்குரியதாகும்.

15. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் மொழி வாசகங்களுக்கிடையே ஏதேனும் ஒப்பீட்டு இன்மைகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தல் சரியானதென கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

எம்.என் ரணசிங்க
செயலாளர்.

கல்வி அமைச்சு, இசுருபாய,
பெலவத்த, பத்தரமுல்ல
2019, செத்தெம்பர் 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சு**

| |
|---|
| |

(அலுவலக தேவைக்கு மாத்திரம்)

**நாட்டிலுள்ள மாகாண பாடசாலைகளின் விசேட கல்விப்பிரிவுகளில் நிலவும் சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்கு கல்விமாணிப் பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவை 2 ஆம் வகுப்பில் II ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2019**

**Recruitment of Bachelor of Education Graduates to Grade II of Class 2 of the Sri Lanka Teacher's Service for Sinhala and Tamil Medium Vacancies existing in Special Education Units in Provincial Schools Island-wide - 2019**

1.0 வெற்றிடங்களுக்காகக் கோரப்படும் மொழி மூலம் தொடர்பாக அட்டவணை 01 ஐப் பாவித்து குறியீட்டு இலக்கத்தை குறிப்பிடவும்

மொழி மூலம் ☐

(உரிய இலக்கத்தை கட்டத்திற்குள் குறிப்பிடவும்)

2.0

2.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) (உதா: AMARAKOON MUDIYANSELAGE NAMAL HERATH) ..........................................................................

2.2 இறுதியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்கள் அடுத்ததாகவும் வரும் வகையில் பெயர் ( உதா:- HERATH A.M.N.)

2.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ..........................................................................

3.0 தற்போதைய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) ..............................................................................
..........................................................................................................................................

4.1 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம்:

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

4.2 தொலைபேசி இலக்கம் : நிலையான

கையடக்க

4.3 திருமணமானவரா/திருமணமாகாதவரா : திருமணமாகாதவர் -1 திருமணமானவர் - 2

(உரிய இலக்கத்தை கட்டத்திற்குள் எழுதவும்)

4.4 பிறந்த திகதி : ஆண்டு மாதம் திகதி

4.5 2019.10.31 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் மாதங்கள் நாட்கள்

4.6 பால் : பெண்/ஆண் பெண் - 1 ஆண் - 0

(உரிய இலக்கத்தை கட்டத்திற்குள் எழுதவும்)

05. கல்வித் தகைமைகள்:-

| க.பொ.த. (சா. தர) பரீட்சை | | | | க.பொ.த. (உ. தர) பரீட்சை | |
|---|---|---|---|---|---|
| ஆண்டு .................... | | பரீட்சை இலக்கம் ................. | | ஆண்டு ........................ பரீட்சை இலக்கம் ...................... | |
| பாடம் | சித்தி | பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
| 1 | | 6 | | 1 | |
| 2 | | 7 | | 2 | |
| 3 | | 8 | | 3 | |
| 4 | | 9 | | 4 | |
| 5 | | 10 | | | |

6.0 உயர் கல்வி தொடர்பான விபரங்கள்

6.1 பட்டம்:-..........................................................................................................

6.2 வழங்கிய பல்கலைக்கழகம்:-.........................................................................................

6.3 பட்டம் செல்லுபடியாகும் திகதி:-...................................................................................

6.4 பட்டம் தொடர்பாக கற்றுள்ள முக்கிய பாடம்/பாடங்கள்: ..........................................................
.......................................................................................................................

6.5 பட்டம் பெற்ற மொழி மூலம்: ..........................................................................................

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு அமைவாக உண்மை என அறியத்தருகின்றேன். நான் இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட பின்னர் தகுதியற்றவன் எனத் தெரியவரும் பட்சத்தில் நான் சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு உள்ளாவேன் என்பதை அறிவேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விடயத்தையும் பின்னர் மாற்ற மாட்டேன்.

திகதி: .................... ...................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

7.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிபடுத்தல் :

இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி............................................ அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவதாகவும், அவர் எனது முன்னிலையில்........................ ஆந் திகதி அவர் ஒப்பமிட்டதாகவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.......................................
உறுதிபடுத்தும் அலுவலரின் கையொப்பம்

திகதி :..........................

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப் பெயர் : ...................................................................
பதவி : ...........................................................................
முகவரி : .....................................................................................
(பதவி முத்திரையிட்டு உறுதிப்படுத்தவும்)

8.0 அலுவலர் அரசாங்க உத்தியோகத்தர் எனில் திணைக்களப் பொறுப்பதிகாரியின் உறுதியுரை :

திரு./திருமதி/செல்வி............................................ அவர்களின் விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கிறேன். அவர் இந்த அமைச்சில்/திணைக்களத்தில், நிரந்தர/தற்காலிக/அமய ஊழியராக சேவை புரிவதாகவும் இந்தப் பதவிக்கு தெரிவு செய்யும் பட்சத்தில் அவரை பதவியில் இருந்து விடுவிக்கலாம்/விடுவிக்க முடியாது என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்

...........................................................
திணைக்களத் தலைவர் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட
அலுவலரின் கையொப்பம்.

திகதி : ...........................
பதவி : ...................................
அமைச்சு/திணைக்களம் : ..........................................................
(பதவி முத்திரையிட்டு உறுதிபடுத்தவும்)

9-1006

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைத் தொகுதியின் கட்டடப் பரிசோகதர் III ஆந் தரத்தின் பதவிக்காக ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018 (2019)

## Open Competitive Examination to Recruit to the Post of Grade III Building Inspector of Technical Service Category - Supervising Management Assistant of the Postal Department - 2018 (2019)

இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைத் தொகுதியின் கட்டடப் பரிசோகதர் III ஆந் தரத்தின் பதவிகள் 08 இற்காக தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான போட்டிப் பரீட்சை பரீட்சைகள் ஆணையாளரால் கொழும்பில் நடாத்தப்படும்.

பரீட்சை நடைபெறுதல் மற்றும் பெறுபேறுகள் வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

2. **மொழிமூலம்.**- பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் நடைபெறும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

3. **ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்கான தகைமைகள் :**

(அ) **கல்வித் தகைமைகள்.**- மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னொரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் ஆறு பாடங்களில் (06) சித்தி அடைந்திருத்தல் ;

மற்றும்

கல்விப் பொது தராதரப் பத்திர (உ. த.) பரீட்சையில் வர்த்தக கணிதம்/தூய கணிதம்/பிரயோக கணிதம் மற்றும் பௌதீக விஞ்ஞானம் இதன் உடன் விஞ்ஞான பாடங்களில் சகல பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) ஒரே அமர்வில் சித்தி அடைந்திருத்தல் (பழைய பாடத்திட்டத்தின்கீழ் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி அடைந்திருத்தல் போதுமானதாகும்).

(ஆ) **தொழிற் தகைமை.**-

(i) தொழிற்துறைக்குரிய தேசிய தொழிற் திறமை (NVQ) 6 ஆம் மட்டத்தில் தகைமையை பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(ii) மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தால் வழங்கப்பட்டிருக்கும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா.

அல்லது

(iii) தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அளித்தல் அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியலாளர் டிப்ளோமா.

அல்லது

(iv) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் டிப்ளோமா.

அல்லது

(v) திறந்த பல்கலைக்கழகம் மூலம் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா.

அல்லது

(vi) இலங்கைப் பொறியியலாளர் நிறுவனத்தால் நடாத்தப்படும் பொறியியலாளர் பரீட்சையின் முதலாவது பகுதி வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(vii) உயர்கல்வி அமைச்சு மற்றும் மேற்படி தொழில்நுட்ப சான்றிதழ் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து விசாரித்து ஆலோசனை பெற்றதன் பின்னர் மேற்படி தொழில்நுட்ப தகைமைகளுக்கு ஏனைய சமமான மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு தொழில்நுட்பத் தகைமை பெற்றிருத்தல்.

(இ) **உடற்தகுதி.**- இலங்கையின் எந்த ஒரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை மேற்கொள்வதற்கும் போதுமான உடல் நிலையும் மனோதிடகாத்திரமும் இருத்தல் வேண்டும்.

(ஈ) **வேறு தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரி விசேட குணாதிசயங்களைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் ;

(iii) 2015.10.25 ஆந் திகதியில் மேற்படி 3(அ) மற்றும் (ஆ) வில் உள்ள சகல தகைமைகளும் சகல விண்ணப்ப தாரிகளாலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

4. வினைத்திறன்காண் தடை.- இலங்கை தொழில்நுட்ப சேவை யாப்புக்கமைய இருத்தல் வேண்டும்.

5. **வயது**.- விண்ணப்பப்படிவம் பாரம் எடுக்கும் இறுதித் திகதியில் 18 வயதுக்குக் குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். அதன்படி 2001.10.25 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன் அல்லது 1989.10.25 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்த திகதியில் உள்ளவர்களுக்கு மட்டும் இதற்காக விண்ணப்பிப்பதற்கு தகைமை உண்டு.

6. **சம்பள அளவுத்திட்டம்.**- பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 3/ 2016 இற்கு அமைய மாதாந்த சம்பளம் ரூபா 31,040 - 10 × 445 - 11 × 660 - 10 × 730  10 × 750 - ரூபா 57,550.00 ஆகும்.

7. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) இந்த அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய A4 (செ. மீ. 21 × 30) அளவுக் கடதாசியில் இரு பக்கங்களையும் பாவித்து விண்ணப்பப்படிவம் தயாரித்தல் வேண்டும். இலக்கம் 1 தொடக்கம் 5 வரை தலைப்பு முதலாவது பக்கத்திலும் மீதி அடுத்த பக்கங்களிலும் உள்ளடக்கக்கூடியவாறு தயாரித்து அதற்குரிய தகவல்களை தமது கையெழுத்தினால் தெளிவாக உள்ளடக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும் பொழுது அந்தத் தலைப்பில் குறிப்பிடப்படும் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவத்தில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் அமைய வேண்டும். விண்ணப்பப்படிவம் அஞ்சல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வெப் இணையத்தளமான www.slpost.gov.lk மூலம் பெற முடியும். சகல விண்ணப்பதாரிகளும் தமது கையொப்பத்தை சான்றிதழ்படுத்தி அனுப்புதல் வேண்டும். எந்த ஒரு நிறுவனத்திலும் சேவையாற்றும் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனத் தலைவரினாலும் அவ்வாறு இல்லாத விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை அரச பாடசாலை அதிபர்/ ஓய்வு பெற்ற பிரதானிகள், பகுதியின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, முப்படை அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள், அரசின் மற்றும் மாகாண அரசாங்க சேவையின் மற்றும் நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர்கள், பௌத்த விகாரையின் விகாராதிபதிகள், மதத் தலைவர், வேறு மதங்களின் மதத் தலைவர்கள் அல்லது மரியாதைக்குரியவர்களைக் கொண்டு அத்தாட்சிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

(ஆ) சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் 2019.10.25 ஆந் திகதிக்கு முன் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்குபடுத்தல் (நிறுவனம் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சை) கிளை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவு அஞ்சலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை மூடி அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைத் தொகுதியின் கட்டடப் பரிசோதகர் பதவிக்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018 (2019)" எனக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதியை தம்வசம் வைத்துக் கொள்வது பிரயோசனமாக அமையும். எந்த ஒரு சான்றிதழின் பிரதியையோ நிழற் பிரதியையோ விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பக் கூடாது.

(இ) அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்தை திணைக்களத் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும்.

8. **பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் :**

(அ) இந்தப் பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் சகல விண்ணப்பதரிகளினாலும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 600.00 பணம் பரீட்சைகள் ஆணையாளருடைய வருமானத் தலைப்பு 20-03-02-13 இன் கீழ் அரச வருமானத்துக்கு வரவு வைக்கக்கூடியவாறு நாட்டில் உள்ள எந்த ஒரு அஞ்சல்/ உப அஞ்சல் அலுவலகங்களிலோ அல்லது மாவட்ட/ பிரதேச செயலகங்களிலோ பணமாகச் செலுத்தி  பெறப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் அகற்ற முடியாதவாறு ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற் படப்பிரதியை தம்வசம் வைத்திருப்பது பிரயோசனமாக அமையும். இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாதவாறு பணம் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டுடன் உள்ள விண்ணப்பப்படிவம் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதுடன் எக்காரணம் கொண்டும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தவோ மாற்றவோ முடியாது.

09. **பரீட்சைக்குத் தோற்றுதல்.-**

(அ) பரீட்சை அறிவித்தலுக்கு அமைய விண்ணப்பப்படிவம் கோரும் இறுதித்திகதியிலோ அல்லது அதற்கு முன்னரோ உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தி முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளரால் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

(ஆ) பரீட்சை அனுமதி பத்திரம் விநியோகித்ததும் உடனடியாக அது பற்றி பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் பரீட்சை அனுமதி பத்திரம் கிடைக்காத பரீட்சார்த்திகள் பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அது சம்பந்தமாக பரீட்சைத் திணைக்களத்துக்கு தெரியப்படுத்த வேண்டும். அதில் பரீட்சார்த்தியுடைய பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும். கொழும்புக்கு வெளிப் பிரதேச பரீட்சார்த்தி என்றால் பரீட்சை அனுமதி பத்திரத்தின் நிழற் பிரதியை அனுப்புவதற்காக விண்ணப்பதாரியின் பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு மேற்படி விபரங்களடங்கிய கடிதம் பெக்ஸ் இலக்கத்துக்கு அனுப்புவது பொருத்தமாகும். அதில் பரீட்சைத் திணைக்களத்தால் கேட்கப்பட்டுள்ள எந்த ஒரு தகவலையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக தங்களிடம் இருக்கும் பூர்த்தி செய்யயப்பட்டு அனுப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவம் அஞ்சலிடும் பொழுது பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டு தம்வசம் வைத்துக்கொள்ளவது மிகவும் பிரயோசனமாக அமையும்.

(இ) பரீட்சார்த்திகள் பரீட்சை அனுமதி பத்திரத்தில் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதுடன் ஏற்பாடாகியுள்ள பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் முதலாவது சந்தர்ப்பத்திலேயே தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி பத்திரம் பரீட்சை மண்டப மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். பரீட்சை அனுமதி பத்திரம் இல்லாமல் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது.

(ஈ) பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதி பத்திரம் வழங்குதல் அதற்காக சகல தகைமைகளும் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொண்டதாக கவனத்தில் கொள்ளப்படக்கூடாது.

(உ) பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்துக்காகவும் மண்டப மேற்பார்வையாளர் திருப்தி அடையும் வகையில் தன்னுடைய ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்காக கீழே காணப்படும் ஆவணங்களில் ஏதாவது ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும்.

(i) தேசிய அடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதி பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்தி ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடியவாறு இரு முக பக்கங்களையும் மூடாதவாறு பரீட்சை மண்டபத்துக்குள் நுழைதல் வேண்டும். அவ்வாறு ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதை மற்றும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை மண்டபத்துக்குள் நுழைந்ததிலிருந்து அம்மண்டபத்திலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு பரீட்சார்த்தியை அறிந்து கொள்ளும் பொருட்டு இரு முகப்பக்கங்களும் தெரியக்கூடியவாறு இருத்தல் வேண்டும். இதற்கு விரோதமாக நடந்து கொண்டால் பரீட்சை எழுத அனுமதிக்க முடியுமாக இருந்தபோதிலும் பரீட்சார்த்தியை அறிந்துகொள்ள முடியவில்லை என பரீட்சார்த்திக்கு பெறுபேறுகள் விநியோகிக்கப்படமாட்டாது.

(ஊ) பரீட்சை நடைபெறுவது சம்பந்தமாக பரீட்சை ஆணையாளரால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். இந்த சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாக வேண்டும்.

10. **சேவையில் இணைத்துக்கொள்ளும் ஷரத்துகளும் நிபந்தனைகளும் :**

(அ) இந்தப் பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் உடையது. அவ்வாறு இருந்தும் பதவிக்குரித்தான ஓய்வூதிய முறை சம்பந்தமாக அரசினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு உத்தியோகத்தர்கள் கீழ்படிதல் வேண்டும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் அந்தச் சந்தர்ப்பத்தில் அரச சேவையின் பதவியில் நிரந்தரமாக்கப்படாமல் இருந்தால் அவர்கள் மூன்று வருடங்கள் தகுதிகாண் நிலையில் உரிய பதவிக்கு நியமிக்கப்படுவர். அரச சேவையில் உள்ள நிரந்தர மற்றும் ஓய்வூதியத்துடனான உத்தியோகத்தர் என்றால் அவர்களுடைய நியமனம் ஒரு வருடம் பதில் கடமையாற்றும் நியமனமாக காணப்படும்.

11. **பரீட்சை முறை.-**

(அ) இந்தப் பரீட்சைக்கு பின்வருமாறு எழுத்துமூல வினாப்பத்திரம் இரண்டில் சித்தி அடைதல் வேண்டும் :-

01. நுண்ணறிவு - காலம் 01 மணித்தியாலம் 100 புள்ளிகள்
தர்க்க ரீதியான அறிவு, சரியான தீர்மானம் எடுக்கும் திறமை, புள்ளிவிபரம் மற்றும் கணித ரீதியான பிரச்சினைகளைத் தீர்க்கும் திறமை, மொழி அறிவு, அட்டவணை, படங்கள் குறிப்புக்கள் அட்டவணை பாவிப்பது சம்பந்தமான திறமை, கணிப்பிடுதல் வினாக்கள் சகலதுக்கும் விடை அளித்தல் வேண்டும்.

02. விடய ஆய்வு தொழில்நுட்பப் பரீட்சை - 01 மணித்தியாலமும் 100 புள்ளிகளும்
அளவிடுதல், திட்டமிடல் சம்பந்தமான அறிவு, அத்திவாரம், மண் வகை, கட்டடப் பொருட்கள், கட்டட அமைப்பும் அதனை முடிவுறுத்தலும் கட்டடத் திட்டம் மூலம் மதிப்பீடு செய்தல், மதிப்பீடு தயாரித்தல் நீர் விநியோகம் மற்றும் குழாய்கள் அமைக்கும் முறையும் சகல வினாக்களுக்கும் விடை அளித்தல் வேண்டும்.

(ஆ) சித்தி அடைவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் 40% க்கு அதிக புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

(இ) பரீட்சைப் பெறுபேறுகள்.- பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளுக்கும் பெறுபேறுகளைத் தெரியப் படுத்தி அனுப்புதல் பரீட்சைகள் ஆணையாளரால் www.results.exams.gov.lk இணையத்தளம் மூலம் மேற்கொள்ளப்படும்.

12. **தெரிவு செய்யும் முறை.-**

(அ) விண்ணப்பப்படிவம் கோரும் இறுதித் திகதியில் அறிவித்தலுக்கு அமைய தகைமைகளைப் பெறாத பரீட்சார்த்திகள் நியமனத்தைப் பெறுவதற்கு தகுதி இல்லை;

(ஆ) எழுத்துமூலப் பரீட்சை.- சித்தி அடையும் பரீட்சார்த்திகளுடைய மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்குக்கு அமைய ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கும் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கை பொது நேர்முகப் பரீட்சையின் மூலம் தகைமையானவர்கள் தெரிவு செய்யப்படுவர். (நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் வழங்கப்படமாட்டாது என்பதுடன் தகைமையை பரீட்சித்தல் மட்டும் மேற்கொள்ளப்படும்)

13. **போலியான தகவல்களை வழங்குதல்.-** இந்தப் பரீட்சைக்குப் தோற்றுவதற்காக எந்த ஒரு பரீட்சார்த்திக்காவது தகைமை இல்லை என தெரியவந்தால் பரீட்சைக்கு முன்போ அல்லது பரீட்சை நடைபெறும் பொழுதோ பரீட்சையின் பின்னரோ எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தி நிலை இரத்துச்செய்வதற்கு இடம் உண்டு. சேவைக்கு இணைத்ததன் பின்னரும் பரீட்சார்த்தியினால் வழங்கப்பட்ட தகவல்கள் போலியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரியவரும் பட்சத்தில் சேவையிலிருந்து நீக்குவதற்கு இடமுண்டு.

14. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத வேறு எந்த ஒரு விடயம் சம்பந்தமாகவும் இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் அஞ்சல் அதிபதிக்குரியதாகும்.

15. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இந்த அறிவித்தல் மொழிகளுக்கிடையில் ஏதும் பொருத்தமில்லாமலோ அல்லது தொடர்பில்லை எனத் தெரியவந்தால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்களம் மொழி மூலம் அறிவித்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

கே. ஏ. என். பி. கந்தனஆராச்சி,
பிரதி அஞ்சல் அதிபதி (நிர்வாகம்)

ரஞ்ஜித் ஆரியரத்ன,
அஞ்சல் அதிபதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை அஞ்சல் திணைக்களம்**

கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைத் தொகுதியின் கட்டடப் பரிசோதகர் III ஆந் தரத்தின் பதவிக்காக ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018 (2019)

**Open Competitive Examination to Recruit to the Post of Grade III Building Inspector of Technical Service Category - Supervising Management Assistant of the Postal Department - 2018 (2019)**

[ ]

(அலுவலக பாவனைக்கு மட்டும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் [ ]

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

1\. (i) முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :- Mr./Mrs./ Miss ..........................................................................
.................................................................................................................................................
உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA
முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
உதா : Gunawadhana M. G. B. S. K.

(ii) சிங்களத்தில்/தமிழில்:- திரு./திருமதி/செல்வி ..........................................................................................
.................................................................................................................................................

2\. (i) அனுமதி பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி :
ஆங்கில பெரிய எழுத்துக்களில் :.........................................................................................................
.................................................................................................................................................

(ii) நிரந்தர முகவரி :
ஆங்கில பெரிய எழுத்துக்களில் :.........................................................................................................
.................................................................................................................................

சிங்களத்தில்/தமிழில் : ..................................................................................................................
.................................................................................................................................................

(iii) அலுவலக முகவரி :
ஆங்கில பெரிய எழுத்துக்களில் :.........................................................................................................
.................................................................................................................................

3\. (i) ஆண்/பெண் :
ஆண்-0 [ ]
பெண்-1
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

(ii) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

4\. (i) கையடக்கத் தொலைபேசி இலக்கம் : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

(ii) தொலைபேசி இலக்கம் : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

5. (i) பிறந்த திகதி :

வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(ii) விண்ணப்பம் கோரும் இறுதித் திகதியில் வயது : (2019.10.25 ஆந் திகதியில் வயது)

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

6. (i) கல்வித் தகைமை :

க. பொ. த. (சா. தரம்)
பரீட்சை நடைபெற்ற வருடமும் மாதமும் :----.
சுட்டிலக்கம் :----.

| சித்தியடைந்த பாடம் | பெற்ற சித்தி |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

க. பொ. த. (உ. தரம்)
பரீட்சை நடைபெற்ற வருடமும் மாதமும் :----.
சுட்டிலக்கம் :----.

| சித்தியடைந்த பாடம் | பெற்ற சித்தி |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |

(ii) தொழிற் தகைமை :

| டிப்ளோமா/தொழில் சான்றிதழின் பெயர் | பயிற்சி நடைபெற்ற காலம் இருந்து - வரை | பாடநெறியின் வருடங்களின் எண்ணிக்கை | வழங்கிய நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

7. நீங்கள் ஏதும் தவறுக்காக நீதிமன்றத்தில் தண்டனை பெற்றுள்ளீரா ? தண்டனை பெற்றிருந்தால் வழக்கு இலக்கம் வழங்கப்பட்ட தண்டனை பற்றிய விபரங்களைக் குறிப்பிடவும் :..............................................................................................
..............................................................................................................................................................

8. பரீட்சைக் கட்டணம் செலுத்திய அஞ்சல் அலுவலகம் :.........................................
செலுத்திய தொகை ரூ. :.......................................
பற்றுச்சீட்டு இலக்கம் :..........................................
திகதி :........................................

பரீட்சைப் பற்றுச்சீட்டை அகற்ற முடியாதவாறு இங்கு ஒட்டவும்.
பற்றுச்சீட்டின் பிரதியை தம்வசம் வைத்துக் கொள்வது பிரயோசனமாக அமையும்.

*9. **விண்ணப்பதாரியின் உறுதியுரை.**- இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானதும் சரியானதும் எனக் குறிப்பிடுகிறேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது விடயம் உண்மைக்குப் புறம்பானதாகவோ பிழையானது என்றோ தெரிவு செய்வதற்கு முன் தெரியவரும் பட்சத்தில் நான் தகைமையற்றவன் ஆவேன் எனவும் பதவி கிடைத்த பின்னர் பிழையான தகவல்களை வழங்கியுள்ளேன் எனத் தெரியவரும் பட்சத்தில் நஷ்டஈடு இல்லாமல் உடனடியாக நான் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதை நான் நன்கு அறிவேன்.*

*மேலும், பரீட்சை நடைபெறுவது சம்பந்தமாக மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் வெளியிடப்படும் சட்டத்திட்டங்களுக்கு நான் கீழ்படிவேன் எனவும் இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை பின்னர் மாற்ற மாட்டேன் எனவும் வெளிப்படுத்துகிறேன்.*

----,
*விண்ணப்பதாரியின் கையொப்பம்.*
*(பிரிவுத் தலைவர்/பொறுப்பு*
*அஞ்சல் அதிபர் முன்னால்)*

*திகதி :----.*

*10. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.**-*
*இந்த விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் திரு./ திருமதி / செல்வி ........................................ அவர்களை எனக்குத் தனிப்பட்ட ரீதியாக தெரிந்தவரென்றும் அவர் எனது முன்னிலையில் ............................. ஆந் திகதி அவருடைய கையொப்பத்தை இட்டார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தப்பட்டுள்ளது எனவும், அந்தப் பரீட்சைப் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.*

----,
*கையொப்பத்தை உறுதிப்படுத்தும்*
*உத்தியோகத்தருடைய கையொப்பம்.*

*திகதி :----.*
*உறுதிப்படுத்தும் உத்தியோகத்தருடைய முழுப்பெயர் :----.*
*பதவி :----.*
*முகவரி :----.*
*(பதவி முத்திரையை பதிக்கவும்)*

*11. **நிறுவனத் தலைவரின்/ திணைக்களத் தலைவரின் சான்றிதழ்** :*

*இந்த விண்ணப்பத்தை அனுப்பும் திரு./ திருமதி/ செல்வி .............................................. அவர்கள் ......................... .......அலுவலகத்தில்/ நிறுவனத்தில் ........................ ஆந் திகதி தொடக்கம் ............................................. பதவியில்/ சேவையாற்றுபவரெனவும் அவருடைய சேவை திருப்திகரமானது எனவும், இந்தப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய நியமனத்துக்காக தெரிவுசெய்யப்பட்டால் அவர் தற்பொழுது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் எனவும்/ முடியாது எனவும் அவர் இதுவரை எந்த ஒரு முறையிலும் அல்லது ஒழுக்காற்றுத் தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர) உட்படவில்லை எனவும், மேற்படி தகவல்கள் உண்மையானதும் சரியானது எனவும் உறுதிப்படுத்துகிறேன்.*

----,
*திணைக்கள/நிறுவனத் தலைவரின்*
*கையொப்பம்.*

*திகதி :-----.*
*நிறுவனத் தலைவரின்/திணைக்களத் தலைவரின் முழுப்பெயர் :----.*
*பதவி :----.*
*முகவரி :- (பதவி முத்திரையை பதிக்கவும்)*

*9-827*

## திருத்தம்

### இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் புகையிரதப் பரிசோதகர் தரம் III க்கு இணைத்துக் கொள்ளுதல் - 2019

*2019, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 2140 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் "இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் புகையிரத பரிசோதகர் தரம் III க்கு இணைத்து கொள்ளுதல் - 2019" என்ற அடிப்படையில் பிரசுரிக்கப்பட்ட 09-301 ஆம் இலக்க, அறிவித்தலில் மாதிரி விண்ணப்பப்படிவத்தில் இல. 01 மற்றும் இல. 13 (இ) மற்றும் 13 (உ) ஆகியன கீழ்வரும் முறையில் திருத்தியமைக்கப்பட வேண்டும்.*

1. தோற்ற இருக்கும் மொழி

   சிங்களம் - 02

   தமிழ் - 03

   (உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

2. குடியுரிமை

   பரம்பரையாக - 01

   பதிவு செய்யப்பட்ட - 02

   (உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

13. (இ) ............................ ஆந் திகதிக்கு மக்கள் வங்கியில் ரூபா 600.00 செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

பற்றுச்சீட்டினை கழறாதவாறு ஒரு முனையினை ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை வைத்திருக்கவும்.)

13. (உ) மேலும் பரீட்சை நடாத்தப்படுவது தொடர்பாக புகையிரதப் பொது முகாமையாளரால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு நான் உடன்படுவேன் என கூறிக்கொள்கின்றேன்.

எம். ஜே. டீ. பிரனாந்து,
புகையிரதப் பொது முகாமையாளர்.

09-1010

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.